ஜெம்ஸ் சத்தம்

Since 1972

பிப்ரவரி 2020

நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர்.

சங்கீதம் 32:7

பணித்தளங்களில் கிறிஸ்து பிறப்பின் செய்தி

ஜெம்ஸ் சத்தம்

Since 1972

GEMS Satham

Transforming Peoples to Transform Nations

அன்பின் மடல் – 2
சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

பெலவீனரையும் பாதுகாக்கும் பிதா – 10

ஊழியர் உபவாசக் கூடுகை – 14

குடும்ப ஐக்கிய கூடுகை – 16

பணித்தளச் செய்திகள் – 18

முன்னேற்றப் பணி முகவரிகள் – 28

Published by

GEMS Educational and Media Services
14/1, Jeba Nagar, Vasanthapuram South,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

Published for

Gospel Echoing Missionary Society

11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Field office

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

அலைகள் கொந்தளிக்கத்தக்கதாய் சமுத்திரத்தைக் குலுக்குகிற சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் வாழ்த்துக்கள். “நான் வானத்தை நிலைப்படுத்தி, பூமியை அஸ்திபாரப்படுத்தி, சீயோனை நோக்கி நீ என் ஜனமென்று சொல்வதற்காக, நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, **என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்**” என்று தன் ஜனங்களுக்கு மறைவிடமாய் இருக்கிறவர் அவர்.

“போராட்டமான போன வாழ்நாளில்
நீரோட்டம் மோதும் இன்னலில்
முற்றுமுடிய வெற்றி அளித்தீர்
குற்றம் குறை நீக்கிக் காத்தீர்” என்று பாடினார்கள் சகோதரி சாராள் நௌரோஜி. அநேக தேவ ஊழியர்கள் வழியாக, வரும் நாட்கள் மிகவும் போராட்டமானவைகள்தான் என்று சொல்லப்படும் வேளையில், அவர் தம் ஜனத்தினைக் காத்துக்கொள்வார் என்ற ஆறுதல் வார்த்தைகளும் கூடவே அளிக்கப்படுகிறது; அல்லேலூயா!

வருடம் பிறந்தவுடனேயே, பலப்பல விதமான போராட்டங்களையே தேசம் சந்தித்துவருகிறது. CAA வுக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் ஆங்காங்கே போராட்டங்களை பல இடங்களில் பார்க்க நேரிடுகிறது. NRC என்ற வார்த்தை அநேகருக்குள் ஒருவித பீதியையே கொண்டுவந்துவிட்டது. இவைகளின்

அடிப்படையில் சர்வகலாசாலைகளில் ஏற்பட்ட கொந்தளிப்பும், அதனை அடக்க அரசாங்கத்தின் முயற்சிகளும் பல கேள்விகளையே உருவாக்கியுள்ளது.

வட இந்திய நகரங்களில், குளிர்காலத்தில் காற்றில் உண்டான மாசு, அநேகருடைய ஆயுசு நாட்களைக் குறைக்கப் போதுமானது என்ற அதிர்ச்சி செய்திகள் மக்களை சிந்திக்கவைப்பதற்குப் பதிலாக, சிதைக்கவே செய்துவருகின்றது. வட குஜராத்தில் 285 கிராமங்களில், 61,000 ஏக்கர் பரப்பளவில், சமீபத்தில் வெட்டுக்கிளிகளின் படை தாக்குதல் நடத்தியதே. சூடானில் இருந்து புறப்பட்டு வந்த அவை உண்டாக்கின சேதம் பெரிதல்லவா!

ஆஸ்திரேலியாவில் அணைக்கக் கூடாமற்போன அக்கினி, காடுகளை அழித்து, மிருக ஜீவன்களையும் அழித்து, சிலருடைய குடியிருப்புகளையும் அழித்துவிட்ட பயங்கரம் உண்டு. 55 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஏற்பட்ட நெருப்பு, பல கோடி உயிரினங்களை காவு கொண்டுவிட்டது அல்லவா!

இந்தியாவில், இந்த நாடு இந்துக்களுக்கே என்ற சத்தம் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. அதேபோல, இலங்கையில் இந்த தேசம் புத்தர்களுக்கே என்ற சத்தமும் அவ்வப்போது கேட்கப்படுவதினால், சபை ஊழியர்கள் பலர் தாக்கப்படுவதினைக் கேட்கமுடிகிறது.

நாடுகளிலிருந்து அகதிகளாகப் புறப்பட்டோரின் நிலையோ, அவர்களின் எதிர்காலத்தினையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

இதற்கிடையில், ஈரானின் இராணுவத் தலைவனான “சுலைமானி” அமெரிக்க இராணுவத்தால் கொல்லப்பட்ட செய்தி, உலக நாடுகளையும் போரில் தள்ளிவிடுமோவென்ற பயம், தலைவர்களையும் கலங்கடித்துவருகிறது. சுலைமானியின் சவ ஊர்வலத்திலேயே 51 பேர் கூட்டத்தில் மிதிபட்டுச் செத்தனர் என்பது நாம் அறிந்ததே. தேசங்களின் எல்லைகளிலே ஏற்படும் அச்சுறுத்தல்கள், இராணுவத்தினரையும் கதி கலங்கச் செய்துவருகிறதே. ஒருவரை ஒருவர் பகைக்கத்தக்கதான செயல்களும் தேசங்கள் தோறும் பரவி பெருகிவருகிறது.

இப்படி சுற்றி சுற்றி தீய செய்திகள் பெருகிவரும் வேளையில்,

வேதத்தின் எச்சரிப்பும் நமக்கு ஞாபகம் வருகிறது. **"இவைகள் எல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பமே"** என்றே (மத். 24:8) வேதம் கூறுகிறது.

ஆயினும் தேவ ஜனங்கள் எப்படி இவைகளின் மத்தியில் பத்திரமாக இருப்பார்கள் என்ற கேள்விக்குப் பதில் காணும் வண்ணம் இந்த மடலில் எழுத முயலுகிறேன்.

எகிப்து தேசம் தேவனால் தண்டிக்கப்பட்ட வேளையில் (யாத். 7:4), இஸ்ரவேல் ஜனங்கள், அதாவது, ஆபிரகாமின் சந்ததியார், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம், அதே இடத்தில்தான் இருந்தது. ஆனால், இந்த வேதனைகள் அவர்களைச் சூழாதபடி தேவ கரம் அவர்களைக் காத்தது என்பது நாம் அறிந்ததே. **அந்த தண்டனை நேரத்திலும், அவர்களை வேறுபிரித்துக் காட்ட கர்த்தர் விரும்பினார்** என்பது நமக்குத் தெரியவரும் உண்மை அல்லவா!

விசேஷமாக, "என் ஜனங்களைப் போகவிடாயாகில், நான் உன்மேலும் உன் ஊழியக்காரர்மேலும், உன் ஜனங்கள்மேலும், உன் வீடுகள்மேலும் பலவித வண்டுகளை அனுப்புவேன்; எகிப்தியர் வீடுகளும் அவர்கள் இருக்கிற தேசமும் அந்த வண்டுகளால் நிறையும்.

பூமியின் நடுவில் நானே கர்த்தர் என்பதை நீ அறியும்படி என் ஜனங்கள் இருக்கிற கோசேன் நாட்டில் அந்நாளிலே வண்டுகள் வராதபடிக்கு, அந்த நாட்டை **விசேஷப்படுத்தி, என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன்** என்றுதானே கர்த்தர் உரைத்தார். (யாத் 8:21-23)

கோசேன் நாடு, இஸ்ரவேல் ஜனங்கள் தங்கியிருந்தது. சில அந்நிய ஜனங்களும், புறதேசத்தாரும் அவர்களோடு தங்கியிருந்தார்கள் என்பது நாம் அறிந்ததே. தேவன் ஆபிரகாமோடு பண்ணியிருந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே, அவர்கள் வாழ்ந்த எல்லைகளை விசேஷப்படுத்தி காத்தார் அல்லவா! **தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்தோடு வாழ்ந்துவந்ததினால், அந்நியரும், புறதேசத்தாரும், பரதேசிகளும் அதே நன்மையை அனுபவிக்க முடிந்தது**.

ஒரு யோசேப்பின் நிமித்தம் எகிப்தையே ஆசீர்வதிக்க வல்லவர் அல்லவா நம் தேவன். தேவனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர்

ஓபேத் ஏதோமின் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் (2 சாமு. 6:12) என்றும் வாசிக்கிறோமே.

அப்படிப்போலவே, அந்த அந்நியரும், புறதேசத்தாரும், விருத்தசேதனம் என்கிற உடன்படிக்கைக்கு உட்படாதவர்களாய் இருந்தபோதிலும், தேவ பாதுகாப்பு இஸ்ரவேலுக்குக் கிடைத்தது போலவே கிடைக்கிறது.

அதைப்போலவே, தேவன் தம்முடைய வல்லமையைக் காண்பிக்கவும், அவருடைய நாமத்தை பூமியிலே பிரஸ்தாபப்படுத்தவும் கொடிய கல்மழையை பெய்யப்பண்ணினார். (யாத். 9:16-18)

“அப்படியே, கர்த்தர் இடிமுழக்கங்களையும், கல்மழையையும் அனுப்பினார். அக்கினி தரையின் மேல் வேகமாய் ஓடிற்று. எகிப்து தேசத்தின்மேல் கர்த்தர் கல்மழையைப் பெய்யப்பண்ணினார்”.

கல்மழையும், கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாய் இருந்தது. எகிப்து தேசம் குடியேற்றப்பட்ட நாள் முதல் அதில் அப்படி ஒருபோதும் உண்டானதில்லை.

எகிப்து தேசம் எங்கும் மனிதரையும், மிருகஜீவன்களையும், வெளியில் இருந்தவைகள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் அந்த கல்மழை அழித்துப்போட்டது...

இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டில் மாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது. (யாத். 9:23-26)

முன்னர் நடந்தது போலவே கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்த எகிப்தியரின் மிருகஜீவன் கூடக் காக்கப்பட்டது (யாத். 9:20). கோசேன் நாட்டினை தேவன் காத்ததினால், அதிலிருந்த மற்ற ஜனங்களின் உடமைகளும் காக்கப்பட்டன.

மீண்டும் ஒரு காட்சியை தேவன் காண்பிக்கிறார்.

தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் எகிப்து தேசத்தின் மேல் உண்டாகும்படி, மோசே தன் கையை வானத்திற்கு நேராக நீட்டுகிறான். அப்போது, எகிப்து தேசம் எங்கும் மூன்று நாட்கள் மட்டும் காரிருள் உண்டாயிற்று.

மூன்று நாள் மட்டும் ஒருவரை ஒருவர் காணவும் இல்லை, ஒருவரும் தம் இடத்தை விட்டு எழுந்திருக்கவும் இல்லை.

இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோவெனில், அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருந்தது. (யாத். 10:21-23)

இந்தக் காரியங்களைப் போலவே, இன்றைக்கும் தேவ ஜனத்தின் நிமித்தம், தேவ ஜனங்களோடு ஒட்டி வாழ்பவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது.

ஆனால், தேவன் தன்னுடைய ஜனத்தை விசேஷித்தவர்களாக மாற்ற இன்னும் இரண்டு காரியங்களைச் செய்கிறார்.

முதலாவது ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் உண்டாகும் பாதுகாப்பு. பழுதற்ற ஆணும், ஒரு வயதுள்ளதுமான ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக் கால்களிலே பூசப்பட்டு காக்கப்படும் ஒரு கூட்டத்தினை தேவன் காண்பித்துக் கொடுக்கிறார்.

“நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும். அந்த இரத்தத்தை நான் கண்டு உங்களை கடந்துபோவேன். நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்” என்பதே. (யாத். 12:13)

அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் உண்டாகும் பாதுகாப்பும் அத்தகையதுதானே. அது **உடன்படிக்கையின் இரத்தமல்லவா** (லூக். 22:20). **நன்மையானவைகளை** பேச வல்லது அல்லவா. (எபி. 12:24)

“இரத்தக் கோட்டைக்குள்ளே நான் நுழைந்துவிட்டேன்
இனி எதுவும் அணுகாது, எந்தத் தீங்கும் தீண்டாது”
என்று நாம் பாடுவது இதைக் குறிக்கத்தானே.

அவருடைய இரத்தினால்தானே நாம் தேவனோடு **ஒப்புரவாகிறோம்** (கொலோ. 1:14). முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே **சமீபமானீர்கள்** (எபே. 2:13) என்பது சத்தியமல்லவா! அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் இருக்கும் பாதுகாப்பு (1 கொரி. 5:7) அதின் கீழ் வந்தவர்களுக்கு உண்டு அல்லவா! அது நம்மை

ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்ய **சுத்திகரிப்பது அல்லவா!** (எபி. 9:14)

இன்னமும் தேவன் தம்முடைய வட்டத்தை சிறியதாக்கி, பரிசுத்தத்தின் மேன்மையையும் காணப்பிக்கத் தவறவில்லை.

அந்த இரத்தத்தின் கீழ் வந்தவர்கள் கடைபிடிக்கவேண்டிய இன்னொன்றை தேவன் சுட்டிக்காட்டுகிறார். பெரிய பெரிய ஆபத்திற்குத் தப்பித்த மீதமிருந்த மக்களில் இதுவும் கவனிக்கத் தக்கது.

"ஏழு நாளளவும் உங்கள் வீடுகளில் புளித்த மா காணப்படலாகாது. எவனாகிலும் புளிப்பிடப்பட்டதைப் புசித்தால் அவன் பரதேசியானாலும், சுதேசியானாலும் அந்த ஆத்துமா இஸ்ரவேல் சபையில் இராமல் அறுப்புண்டு போவான்.

புளிப்பிடப்பட்ட யாதொன்றையும் நீங்கள் புசிக்கவேண்டாம். உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள்" (யாத். 12:19,20). இது நிழலாட்டமாகச் சொல்லப்படுவதனைத்தான் 1 கொரி. 5:6-8 வசனங்களில் ஆவியானவர் பவுலின் மூலமாக சொல்கிறார் என்று நான் சொல்லுவேன்.

"கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?

ஆகையால் நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கும்படியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே.

ஆதலால், பழைய புளித்தமாவோடே அல்ல, **துர்க்குணம் பொல்லாப்பு** என்னும் புளித்தமாவோடும் அல்ல, **துப்புரவு, உண்மை** என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.

வாழ்க்கையில், வார்த்தையில் துப்புரவு, உண்மை எத்தனை முக்கியம் என்பதனையும், துர்க்குணம், பொல்லாப்பு என்ற புளித்த மா எத்தனைக் கொடியது என்பதனையும் நாம் நினைவுகூர மறக்கலாகாதே. மறைந்திருக்கும் இக்கேடுகள், பொதுவாக பாதுகாக்கப்பட்டு, நம்மை தப்புவித்த ஆபத்துகளைக் கடந்தவர்களாய் இருந்தபோதிலும், நம்மை

வாரிக்கொண்டுபோக வல்லமையுள்ளது அல்லவா!

மேலும், இயேசு பரிசேயரின் உபதேசத்தினையும் புளித்த மாவுக்கு ஒப்பிடுகிறதைக் கவனிப்போம். “மாயமாகிய புளித்த மா” என்கிறார் உள்ளொன்றும் புறம்பொன்றும் வாழும் வாழ்வு. (லூக். 12:1)

மாய்மாலத்தைத்தானே இயேசு வெகுவாய் கண்டிக்கிறார் (மத். 23 அதி). அது வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பிடப்படுவது அல்லவா.

“மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்.

அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.” (மத் 23:27,28)

உள்ளான பரிசுத்த வாழ்க்கை வேட்கை நம்மை ஆட்கொள்ளவேண்டிய அவசியம் எத்தனையாய் வலியுறுத்தப்படுகிறது இயேசுவினால். ஆடையும், உபதேசமும் சரியாய் இருந்தாலும், உள்ளத்தையே காண்கிற ஆண்டவர் நம்மைப் பாதுகாக்க விரும்புகிறதினால், உலகத்தாரிலிருந்து பிரித்து விசேஷித்தவர்களாக மாற்ற இதனையே எதிர்பார்க்கிறார்.

இஸ்ரவேல் தேசம் இன்று தன்னுடைய பாதுகாப்புக்காக **மூன்றடுக்கு அரணை வான் வெளியில் அமைத்துள்ளது** என்பது செய்தி. அதைப்போலவே, தேவனும் நமக்கு இப்படிப்பட்ட பாதுகாப்பினை வைத்துள்ளார் என்பது ஆச்சரியம் அல்லவா!

வெளி உலகில் என்ன நடந்தாலும், தேவ பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாக தேவன் உண்டாக்கிவைத்ததினை அனுபவிக்க நாமும், கீழ்ப்படிதல், இயேசுவின் இரத்தத்தினைப் பிடித்துக்கொண்ட நம்பிக்கை, பரிசுத்தம் இவைகளை நமதாக்குவோம். **"எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்."** (நீதி. 1:33)

ஜலத்தினால் உலகம் அழிக்கப்பட்டபோது, **ஜலமே நேவாவுக்குக் காவல்**. (1 பேதுரு 3:20)

தேவ மக்களை நெருப்பில் போடும்படியாகத் தூக்கிச் சென்றபோது, நெருப்பினால் எதிரிகள் அழிக்கப்பட, **நெருப்பே** தேவனுடைய பிள்ளைகளாம் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவுக்கு **விடுதலை உண்டாக்கின ஆயுதம்**. (தானி. 3:22-25)

இருளும் காரிருளும் உலகினை மூடும் வேளை
இருதயமும் துவளக் கூடுமே பயத்தால்
இறகுகளால் உன்னை மூடிப் பாதுகாப்பேன் என்றவரின்
இறைவாக்கினை நம்புவோம் நாமே

காக்கப்பட்டால் போதும் என்றல்ல
கர்த்தருக்கு விசேஷித்தவர்களாய் மாறிட
கல்வாரியின் இரத்தத்தினால் உண்டான உடன்படிக்கையில்
காக்கப்படுவோம் நாமும் வேகமே

பாளையத்திலும் பரிசுத்தம் பேணிக் காக்க
பானையிலும் பரிசுத்தம் என்ற வேத வாக்கை
பாங்காக கடைப்பிடித்திட என்றும்
பார்வையிலும், பழக்கத்திலும் பரிசுத்தம் காண்பிப்போம்

மாய்மாலம் அகற்றி திறந்த புத்தகமாய்
மானிடர் முன் நாமும் வாழ்ந்திட
மாதேவன் கிருபை அளிப்பாரே நிதமும்
மாறா தேவ வாக்குகள் நமக்கு உண்டே

அன்பரின் அறுவடைப் பணியில்

அன்பு சகோதரர் D. அகஸ்டின் ஜெபக்குமார்

பெலவீனரையும் பாதுகாக்கும் பிதா

சத்துரு நமக்கு விரோதமாகக் கிரியை செய்கிற வேளையில், நம்முடைய சரீரத்திலே, உள்ளத்திலே, ஆத்துமாவிலே மற்றும் ஆவியிலே ஒருவிதமான கலக்கம் உருவாகின்றது. என்றபோதிலும், நம்முடைய தேவனைக் குறித்து அறிகிற அறிவானது, நம்மை எத்தகைய இடத்திலிருந்து எத்தகைய நிலைக்குக் கொண்டு செல்லப்போகிறது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். தேவனுடைய வசனங்களை நாம் அனுதினமும் வாசிப்பதின் மூலமாகவே, தேவனுடைய வழிநடத்துதல்களையும், அவருடைய முறைகளையும் நம்மால் அறிந்துக்கொள்ளமுடியும்.

எவ்வளவாக தேவனுடைய பாதைகளிலும், வழிகளிலும் நடந்திருக்கவேண்டுமோ, அவ்வளவாய் இஸ்ரவேல் ஜனம் நடக்கவில்லை. அவர்களுக்கு மத்தியில் வலுவான தேவ ஊழியர்களை தேவன் நியமித்துக்கொடுத்தபோதிலும், அவர்கள் தேவன் விரும்பியவாறு நடக்கவில்லை. வானத்திலிருந்து அக்கினியை இறக்கக்கூடிய, மழை பெய்யாதபடி வானத்தை அடைக்கக்கூடிய வல்லமை பெற்றிருந்த தீர்க்கதரிசியாகிய எலியாவை கொடுத்திருந்தார். எலியாவைக் காட்டிலும் வல்லமையான ஊழியனான தீர்க்கதரிசியாகிய எலிசாவையும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் கொடுத்திருந்தார். யாருடைய முகத்துக்கும் பயப்படாமல், கர்த்தருடைய வார்த்தைகளை தைரியமாக உரைக்கும் ஊழியர்களை இஸ்ரவேல் மக்கள் பெற்றிருந்தபோதிலும், கர்த்தருடைய வழிகளில் செம்மையாகவும், கவனமாகவும் அவர்கள் நடக்கவில்லை. தேவன் குறித்திருந்த பாதையில் நடப்பதற்கு அவர்கள் தவறிப்போனார்கள். தேவனைப் பிரியப்படுத்தவோ அவர்களுக்கு மனதில்லாமற் போயிற்று.

ஆனால், தேவனோ, நாம் பெலவீனமுள்ளவர்களாயிருந்தபோதிலும் நம்மை நேசிக்கின்றவர். நம்முடைய பெலவீனங்கள் வெளியிலே ஒருவேளை தென்படலாம் அல்லது தென்படாமலுமிருக்கலாம்; என்றபோதிலும், நம்மேலிருக்கும் தேவனுடைய அன்பையோ நாம் ஒருக்காலும் சந்தேகிக்க முடியாது.

அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணி, இன்ன இன்ன ஸ்தலத்திலே பாளயமிறங்குவேன் என்று தன் ஊழியக்காரரோடே ஆலோசனைபண்ணினான். ஆகிலும் தேவனுடைய மனுஷன் இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி இன்ன இடத்துக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும் என்று சொல்லச் சொன்னான்.
(2 இராஜா 6:8,9)

காரணங்கள் ஏதுமில்லாதபோதிலும், இஸ்ரவேல் ஜனங்களை மீண்டும், மீண்டும் தாக்கும்படியாக சீரியாவின் ராஜா முயற்சித்துக்கொண்டிருந்ததுடன், அதற்கான திட்டங்களையும் தீட்டிக்கொண்டிருந்தான். தேவனோடு கூட எத்தகைய உறவில் வாழவேண்டுமோ, தொடர்பில் காணப்படவேண்டுமோ, அத்தகைய நிலையில் இஸ்ரவேல் ஜனங்களுடைய வாழ்க்கை காணப்படவில்லை. இஸ்ரவேல் மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையோ குளிர்ந்துபோன நிலையிலேயே காணப்பட்டது; தேவன் மீது எத்தனை தாகம் இருந்திருக்கவேண்டுமோ, அத்தனையான தாகம் அவர்களிடத்தில் காணப்படவில்லை; தேவன் மீது எத்தனையான அன்பு கொண்டிருக்கவேண்டுமோ, அத்தனையான அன்பு அவர்களிடத்தில் வெளிப்படவில்லை; தேவனோடு கூட எத்தனையாய் ஒன்றித்து, இணைந்து வாழ்ந்திருக்கவேண்டுமோ, அத்தனையாய் அவர்கள் இணைந்து வாழவில்லை; தேவனுடைய வார்த்தைகளுக்கு எத்தனையாய் செவிகொடுக்கவேண்டுமோ, அத்தனையாய் அவர்கள் செவிகொடுக்கவில்லை. என்றபோதிலும், தேவனுடைய பார்வையோ, இஸ்ரவேல் மக்களுக்கு விரோதமாக திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கும் சத்துருக்கள் மேலேயே காணப்படுகின்றது.

தன்னுடைய ஜனங்களுக்கு விரோதமாய் சத்துருக்கள் யோசித்துக்கொண்டிருப்பது என்ன? தன்னுடை ஜனத்திற்கு விரோதமாய் சத்துருக்கள் தீட்டிக்கொண்டிருக்கும் திட்டங்கள் என்ன? இஸ்ரவேல் மக்களுக்கு விரோதமாக சத்துருக்கள் எங்கே பாளயம் இறங்க முயற்சிக்கின்றார்கள்? எத்தைகைய மறைவான, ஒளிவான இடங்களில் சத்துருக்களின் பார்வை இருக்கின்றது? போன்ற காரியங்களையெல்லாம் தேவன் அறிந்துகொண்டிருந்தார்.

இன்றைய நாட்களில், நாமும் யுத்தக் களத்திலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நம்மை அழிப்பதற்காக, நமக்கு விரோதமாக சத்துருக்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கக்கூடும். நம்முடைய பெலவீனமான பகுதிகளைப் அறிந்துகொண்டு, நம்மைத் தாக்குவதற்கு சத்துரு முயற்சித்துக்கொண்டிருக்கலாம்.

சத்துரு திட்டங்களைத் தீட்டுவதைக் குறித்தும், யோசித்துக்கொண்டிருப்பதைக் குறித்தும், தாக்குதல் நடத்தும்படியாகத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருப்பதைக் குறித்தும், இஸ்ரவேல் ராஜாவோ அறியக்கூடாதவனாயிருந்தான், இஸ்ரவேல் ஜனங்களின் நிலையும் அவ்வாறே காணப்பட்டது. தன்னுடைய அறைக்குள்ளே சத்துரு நினைத்துக்கொண்டிருப்பது என்ன? என்பதைக் குறித்த அறிவு இஸ்ரவேலருக்கு இல்லாதிருந்தது. என்றபோதிலும், நமக்கு விரோதமாக எழும்பிக்கொண்டிருக்கும் காரியங்களை நாம் அறியாமல் காணப்படுகின்ற வேளையிலும், நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகின்ற பெலவீனமான பகுதிகளைக் குறித்த அறிவு நமக்கு இல்லாதிருந்தபோதிலும், நம்முடைய பெலவீனங்களை சத்துரு அறிந்திருந்தபோதிலும், நம்மை பாதுகாப்பதற்காக வழிகளைத் திறக்கின்றவர்; அதுமாத்திரமல்ல, காப்பாற்றும்படியாக ஊழியர்களை உடனே அனுப்புகின்றவர் நமது தேவன்.

இஸ்ரவேல் ஜனங்கள் எச்சரிக்கையாக இல்லாதபோதிலும், தங்கள் பெலவீனமான பகுதிகளை அறியாதிருந்தபோதிலும், சத்துரு தங்களுக்கு விரோதமாகத் யோசனை பண்ணிக்கொண்டிருப்பதையும், திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருப்பதையும் அறியாதிருந்தபோதிலும், தனது ஜனத்திற்கு விரோதமாக எதிரிகள் எழும்பிவருதை அறிந்துகொண்ட தேவன், எலிசா தீர்க்கதரிசியின் மூலம் எதிரியின் திட்டத்தை வெளிப்படுத்தினாரே. தேவனுடைய மனுஷனான எலிசா, இஸ்ரவேல் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி, இன்ன இடத்துக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும் (2 இராஜா 6:9) என்று எச்சரித்ததினால், இஸ்ரவேல் ஜனங்கள் பாதுகாக்கப்பட்டனரே. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து, தனக்குக் குறித்துச்சொன்ன ஸ்தலத்திற்கு மனுஷரை அனுப்பிப்பார்த்து எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக்கொண்டான் (2 இரா 6:10) என்ற வசனம், ஒருமுறை மாத்திரமல்ல, அநேகந்தரம் அவர்கள் காக்கப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. தீர்க்கதரியாகிய எலிசாவின் வார்த்தைகளுக்கு இஸ்ரவேலின் ராஜா செவிகொடுத்ததினாலேயே இந்தக் காரியம் சாத்தியமாயிற்று.

நம்மைப் பாதுகாக்க எண்ணங்கொண்டிருக்கும்போது. ஆவியில் நிறைந்திருக்கும் சில மனிதர்களை தேவன் எழுப்புகின்றார், அவர்களுக்கு வெளிப்பாடுகளைக் கொடுக்கிறார், அவர்களைக் கொண்டு நம்மை எச்சரிக்கின்றார். எலிசாவினிடத்திலிருந்து எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்டதோடு மாத்திரமல்லாமல், தன்னுடைய பெலவீனமான பகுதிகளையும், சத்துரு தாக்கக்கூடிய பகுதிகளையும் இஸ்ரவேல் ராஜா அடையாளம்

கண்டுகொண்டு தன்னையும், தன்னுடைய ராஜ்யத்தின் ஜனங்களையும் தப்புவித்துக்கொண்டான்.

நம்முடைய நிலையை மனதில் கொண்டு நம்மிடத்தில் அன்புகூராமல், நம்மேல் அவர் வைத்திருக்கும் திட்டத்தினை மனதில்கொண்டே அவர் நம்மிடத்தில் அன்புகூருகின்றார். நம்முடைய பாளையத்தில் அநேக இடங்களில் பெலவீனமான பகுதிகள் காணப்படக்கூடும், சத்துரு அதனை அறிந்து நம்மேல் யுத்தம் பண்ணுவதற்காக திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கக்கூடும்; என்றபோதிலும், நம்மேல் அவர் வைத்திருக்கும் திட்டத்தின் அடிப்படையில் நம்மை தப்புவித்துக் காக்கிறார். நம்மைக் குறித்து தேவனுக்கு இருக்கும் உயர்ந்த திட்டத்தினை மனதில் கொண்டு, நமது பெலவீனங்களை அவர் பார்க்காமல், சத்துருவின் திட்டங்களிலிருந்து நம்மை பாதுகாத்து ரட்சிக்கிறார்.

தீர்க்கதரிசியாகிய எலிசாதான் இந்தக் காரியத்தைச் செய்கிறவன் என்பதை சத்துரு அறிந்துகொண்டபோது, எலிசாவை அழித்துவிட சத்துரு முயற்சித்தான். இஸ்ரவேல் மக்கள் மீது இருந்த சத்துருவின் பார்வை, இப்போதோ, எலிசாவின் மேல் திரும்பிற்று. இன்றைய நாட்களிலும் நடப்பது இதுவே, முதலாவது ஜனங்களை தாக்குவதற்கு சத்துரு முயற்சிக்கிறான்; அவர்களை எச்சரிக்கும் ஊழியர்கள் எழும்பும்போதோ, அவர்களை அழித்துவிட திட்டங்களைத் தீட்டுகின்றான். ஒரு கூட்டத்தின் மேல் இருந்த சத்துருவின் பார்வை, ஒரு தனி மனிதன் மேலே திரும்பிவிடுகிறது. ஆவியினாலே அபிஷே கம் பண்ணப்பட்ட, தேவ சத்தத்தை தெளிவாய் கேட்கின்ற, தேவனோடு தொடர்பு வைத்திருக்கின்ற அந்த மனிதன் யார்? என்று சத்துரு தேடத் தொடங்கிவிட்டான். நான் தேவனுக்காக நிற்கிறேன், தேவனுக்காக காரியங்களைச் செய்கிறேன், தேவனுடைய சத்தத்தைக் கேட்கிறேன் அதனை அறிவிக்கிறேன், தேவனோடுகூட நல்லதோர் தொடர்பில் வாழுகின்றேன் என்று ஒருவேளை நாம் சொல்லக்கூடும். ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தாலும், தேவனோடுகூடவே நடந்துகொண்டிருந்தாலும், சத்துருவின் பார்வை உங்கள் மேல் விழக்கூடும்.

அப்பொழுது அவன் அங்கே குதிரைகளையும் இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்; அவர்கள் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்துகொண்டார்கள். (2 இரா 6:14)

ஒரு மனிதனுக்காக இத்தனை பெரிய இராணுவத்தை அனுப்புகிறான் சத்துரு. தேவ மனிதனுடைய எச்சரிப்பின் சத்தத்தை அடக்கிப்போடும்படியாக சத்துரு பலமுள்ள ராணுவத்தையும், வீரர்களையும், குதிரைகளையும், ரதங்களையும் அனுப்புகின்றான். எலிசாவுக்கு விரோதமாக சத்துரு யுத்தத்திற்கு ஆயத்தமானபோது, எலிசாவை அழிக்கும்படியாக சத்துரு

தொடர்ச்சி 17-ம் பக்கம்

ஊழியர் உபவாசக்

கூடுகை

புதுவருட ஊழியர் கூடுகை சிக்காரியா

புதுவருட ஐக்கியக் கூடுகை சிக்காரியா

13-ம் பக்கத் தொடர்ச்சி

விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான் (*2 இரா 6:17*).

சத்துரு நமக்கு விரோதமாக குதிரைகளையும், இரதங்களையும் அனுப்பும் முன்னதாகவே, நம்மைப் பாதுகாக்கும்படியாக, அக்கினிமயமான குதிரைகளையும், இரதங்களையும் தேவன் நமக்காக அனுப்புகிறவர். சத்துருவின் பலவிதமான திட்டங்கள் நம்மை சோர்வடையச் செய்திருக்கலாம், என்றபோதிலும், சத்துருவின் திட்டங்களுக்கு முன்னதாகவே நம்மை பாதுகாக்கும்படியான ஆயத்தங்களைச் செய்கிறவர் நம்முடைய தேவன். நம்மை இரட்சிக்கிறவர், சத்துருக்களையோ குருட்டாட்டம் பிடிக்கச் செய்ய அவர் வல்லவராயிருக்கிறார்.

நம்முடைய பெலவீனத்தை சத்துரு அறிந்துவிட்டானே, எனவே திரும்பத் திரும்ப அத்தகைய இடங்களில் பாளையமிறங்குகின்றானே என்று பயப்பட்டுக்கொண்டிருக்கக்கூடும். தேவனைக் குறித்த அறிவுக்குப் பதிலாக, சத்துருவைக் குறித்த அறிவினாலேயே நீங்கள் நிறைந்திருக்கக்கூடும்; என்றபோதிலும் நம்முடைய தேவனோ நம்மை பாதுகாக்கிறவர்.

ஊழியர் உபவாசக் கூடுகை - சிக்காரியா

2019 – ம் ஆண்டின் ஜெம்ஸ் ஊழியர் உபவாசக் கூடுகை, டிசம்பர் 27, 28, 29 ஆகிய மூன்று நாட்கள் சிக்காரியா ஜெம்ஸ் ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. **“மகிமையின் மேல் மகிமை”** என்ற தலைப்பின் கீழ் நடைபெற்ற இக்கூடுகையில், ஜெம்ஸ் ஊழியர்கள் குடும்பமாகப் பங்கேற்றனர். சிறப்புச் செய்தியாளராக அழைக்கப்பட்டிருந்த போதகர் செல்வக்குமார் டேவிட் மற்றும் ஜெம்ஸ் ஊழியர்கள் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டனர். தேவசமுகத்தில் அமர்ந்து வசனத்தின் அடிப்படையில் தங்களை ஆராய்ந்து அறியவும், தேசத்திற்காகவும் மற்றும் தேசத்தில் நடைபெற்றுவரும் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், இக்கூடுகை வழிவகுத்தது.

பணித்தளச் செய்திகள்

ஜார்க்கண்ட் கோட்டம்

01 **கடுவா**

தஸ்ஷார் என்ற பணித்தளத்தில் நடத்தப்பட்ட ஏரியா கன்வென்ஷன் கூட்டத்தில் 127 விசுவாசிகள் உற்சாகமாக கலந்துகொண்டு தேவனை ஆராதித்தார்கள். சகோதரர் சுரேஷ் சிலாஸ் கர்த்தருடைய வசனத்தை பகிர்ந்து கொண்டார். ஜார்க்கண்ட் கோட்டத்தில் 15 பேருக்கு திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. துதியுங்கள்! குடுவா பிம்ரலா பகுதியில் ஆலயம்கட்ட பார்க்கப்பட்டுள்ள நிலத்தின் பத்திரப்பதிவு தடையில்லாமல் முடியவும், தடைபட்டுள்ள இப்பணித்தள ஊழியரின் 2 மகள்களின் திருமணத்திற்காகவும், மனைவியின் சீரா சுகத்திற்காகவும் மற்றும் இப்பணித்தளத்தில் செயல்படுகிற ஜெம்ஸ் ஆங்கிலப்பள்ளிக்காகவும் ஜெபியுங்கள்.

02 **ராஜ்ஹாரா**

நாகேசர், குரெவாலேவா, துக்பேரா, பஸ்னா, கோத்தி, பன்கேட்டா, தெலியாரி, லாம்பிபட்ரா, கரிகான், சட்வா, பிக்கானி, ராஜ்ஹரா, லமிபட்ரா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. அசுத்த ஆவியின் கட்டுகளினால் பாதிக்கப்பட்டிருந்த மனோஜ் சுந்தர்சா, கீதா, மாலதி, சாந்தி ஆகியோருக்கு ஜெபிக்கப்பட்ட ஜெபத்தினால் விடுதலை கிடைத்தது. துதியுங்கள்! பத்தியாதேவி தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், இக்களத்தில் ஊழியம் செய்யும் ஊழியரின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

03 **லட்டாக்**

ராம்பானா, பானா பீம்காட், ஆதர், ரமுனா, லாத்தாக் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக சுவிசேஷக் கைப்பிரதிகள் 150 பேருக்கு விநியோகிக்கப்பட்டன. ஞானஸ்நானம் எடுப்பதற்கு 2 பேர் ஆயத்தமாக இருக்கிறார்கள். இப்பகுதியில் உள்ள வாலிபர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகவும், இக்கள ஊழியரின் மனைவி மற்றும் பிள்ளைகளின் சீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

04 **காலா**

சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதியஏற்பாடு வாயிலாக 200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. வித்தியாலாயா பள்ளியில் 155 சிறுவர்களுக்கு வசனம் போதிக்கப்பட்டு ஜெபத்தில் வழி நடத்தப்பட்டனர் துதியுங்கள்! பச்சு கேசவ் இடுப்புப் பகுதியிலுள்ள வலி மாறவும், குந்திதேவியின் இரட்சிப்பிற்காகவும், இப்பணித்தள ஊழியரின் உறவினர்களுடைய இரட்சிப்பிற்காகவும் மற்றும் ஊழியத்தில் காணப்படும் தடைகள் மாறவும் ஜெபியுங்கள்.

05 **மொஹம்மத்கஞ்ச்**

4 கிராமங்களில் படக்காட்சி ஊழியம் செய்யப்பட்டு சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடு வாயிலாக 280 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கால் வலியினால் பாதிக்கப்பட்டிருந்த சரவண் சௌத்திரிக்கு விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகம் கிடைத்தது. சபையில் விசுவாசிகள் அதிகரிக்கவும், மோர்வே பகுதியில் புதிதாக ஆத்துமாக்கள் வரவும், இக்கள ஊழியரின் மனைவிக்கு தலைவலியிலிருந்து சுகம் கிடைக்கவும், அவருடைய பிள்ளைகளுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

06 **தஸ்ரார்**

தேவ்கானா, ஜர்ஹி, தஸ்ரார், பயோர் ஆகிய இடங்களில் படக்காட்சி ஊழியம் செய்யப்பட்டது. இதன் வாயிலாக சுமார் 300 பேர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை

சரித்திரத்தை அறிந்துகொண்டனர். ராம் நாராயண ராம், ராகுல்குமார் ரவி, உஷாதேவி, கிருஷ்ணா ராம், காமேஷ்வர் ராம் ஆகியோர் புதிதாக சபைக்கு வருகிறார்கள். ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக இருக்கிற 4 பேருக்காகத் துதியுங்கள். இக்கள ஊழியருடைய மனைவியின் சரீர சுகத்திற்காகவும், அவருடைய பிள்ளைகளின் ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

07 பர்கஹார்

கர்டிஹா, ஹீடார், கவாரி, கோடானி, கஜீரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக 300 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சுனில்ராம் குடும்பம் இரட்சிக்கப்படவும் மற்றும் அவருடைய சுகத்திற்காகவும், சபை விசுவாசிகளின் பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும், அடிக்கடி பெலவீனப்படுகிற இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சுகத்திற்காகவும், பிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

08 மஞ்ஜியா

ஓப்ரா பகுதியில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக ஆர்த்திகுமாரி, சுஜந்தாகுமாரி, ராகேஷ்குமார், மனீஷ்குமார் ஆகியோர் புதிதாக சபைக்கு வருகிறார்கள். ஞாயிறு பள்ளி ஊழியத்தின் வாயிலாக 14 சிறுபிள்ளைகளுக்கு வசனம் போதித்து ஜெபத்தில் வழிநடத்தப்பட்டார்கள். திருமணமாகி அநேக ஆண்டுகள் ஆகியும் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படாதிருக்கிற சன்பதியாதேவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், சந்திரவதிக்கு குறைவாக உள்ள கண்பார்வை சரியாகவும், இப்பணித்தள ஊழியரின் குடும்பத்தில் காணப்படுகிற ஆவிக்குரிய போராட்டங்கள் மாறவும் ஜெபியுங்கள்.

09 சத்தர்பூர்

சத்தர்பூர் சபையில் நடத்தப்பட்ட மூன்று நாள் உபவாசக் கூடுகையில் விசுவாசிகள் உற்சாகமாக கலந்துகொண்டனர். சபையில் திருவசனத்தைக் கேட்டுவந்த புதிய விசவாசிகளில் 4 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். பெண்கள் கூட்டம் விசுவாசிகளின் வீடுகளில் ஆரம்பிக்கப்பட்டது. ரீட்டாதேவிக்கு அசுத்த ஆவியின் போராட்டித்திலிருந்து தேவன் விடுதலை கொடுத்தார். துதியுங்கள்! ஹசன்பூர் பகுதியில் பில்லி சூனியம் செய்பவர்கள் இரட்சிக்கப்படவும்,

இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

மஹாராஷ்டிரா கோட்டம்

10 மல்காபூர்

படக்காட்சி ஊழியத்தின் வாயிலாக 200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சபையில் சனிக்கிழமை தோறும் வாலிபப் பிள்ளைகளுக்கு வேதாகம வகுப்புகள் நடத்தப்படுகிறது. இதனால் சபையில் விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை காணமுடிகிறது. இந்த ஆண்டிற்குள் 50 நபர்கள் ஞானஸ்நானம் பெறவும், இரட்சிக்கப்படாதிருக்கிற இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்தினருக்காகவும், மறைமுகமாக ஊழியத்தை விரோதிக்கிற மதவாதிகளின் மனமாற்றத்திற்காகவும் ஜெபியுங்கள்.

11 லடேகாவோன்

ரத்தினகிரி, ககன்பாவ்டே, தஹசில், பாவேலி, கவ்ஷி, பாட்டில்வாடி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியமும் கிராம சுவிசேஷக் கூட்டமும் நடத்தப்பட்டது. கோதேவாடி பகுதியில் கிடைத்த 5 புதிய குடும்பங்கள் தொடர்ந்து சபை ஆராதனையில் கலந்துகொள்கிறார்கள் துதியுங்கள்! இப்பணித்தள ஊழியரின் மகள் மற்றும் மகனுக்கு தேவன் படிக்கக்கூடிய ஞானத்தைக் கொடுக்கும்படியாகவும், அடிக்கடி பெலவீனப்படுகிற ஊழியருடைய சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

12 கோரீகாவ்

இப்பணித்தள சபையில் திருவசனத்திற்கு கீழ்ப்படிந்து திருமுழுக்குப்பெற்ற 7 பேருக்காக துதியுங்கள். வாலிபர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஒருநாள் சிறப்புக் கூட்டம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. துதியுங்கள்! அஞ்சலி என்பவரது வீடு புயலில் விழுந்துவிட்டபடியால் அவர்கள் குடியிருக்க தகுந்த வீடு கிடைக்கவும், இப்பணித்தள ஊழியரின் குடும்பம், ஊழியம் மற்றும் குடும்ப உறவினர்களுடைய இரட்சிப்பு ஆகியவற்றிற்காகவும் ஜெபியுங்கள்.

13 **ஷேகர்பூரா**

தாபோலே கிராமத்தில் செய்யப்பட்ட தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக 3 குடும்பத்தினர் சந்திக்கப்பட்டனர். குடிபழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களுக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது. மாலை நேரத்தில் படிக்கவருகிற 30 பிள்ளைகளுக்கு வசனம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. விக்கிரக வழிபாட்டில் சிக்கி இருக்கிறவர்கள் விசுவாச வாழ்க்கைக்குள் வரவும், திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிறவர்களுக்காகவும், ஊழியருடைய தாயாரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

14 **மால்வாடி**

கொல்ஹாபூரி பணித்தளத்தில் ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. சகர்ப்பா, சத்திரா பகுதிகளில் உள்ள விசுவாசிகளோடு ஐக்கிய கூடுகை நடத்தப்பட்டது. தீமோத்தேயு வேதாகம கல்லூரி மாணவர்கள் நல்ல முறையில் பயிற்சிபெற்று வருகிறார்கள். துதியுங்கள்! இக்கோட்டத்தில் செயல்படுகிற 300 ஜெபக்குழுக்களுக்காகவும், மஹாராஸ்டிரா மாநிலத்தில் எழுப்புதல் உண்டாகவும், இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சீர ஆரோக்கியத்திற்காகவும், மகளின் மருத்துவ பணிக்காகவும் ஜெபியுங்கள்.

சோன்பத்ரா கோட்டம்

15 **கிவஹி**

கிவஹி, கேவால், பக்பியானி, மூட்பேட்வா, ஜோரூகாட், மஹூலி, வின்தம்கஞ்ச், சலையாடிஹ், ஜதாஜூவா, முண்டிசேமர் ஆகிய கிராமங்களில் சுமார் 250 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. மீனாதேவி, ரீனாதேவி, கீரன்தேவி, சங்கீதாகுவார் ஆகியோருக்கு ஜெபத்தின் வாயிலாக சத்துருவின் பிடியிலிருந்து விடுதலை கிடைத்தது. துதியுங்கள்! சீர பெலவீனத்தினிமித்தம் பின்மாற்றத்தில் இருக்கும் நாரத் முன்னி ராமின் சீரம் மற்றும் ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்காகவும், இப்பணித்தள ஊழியருடைய தொடர் ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

16 **சக்திநகர்**

பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக மகேஷ், சுரேந்திரசேட், அகிலேஷ், இந்திரகமல்,

அனித்தா, பூஜா, ரீத்தா ஆகியோர் வசனத்தால் தொடப்பட்டனர். விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக்கூடுகை நடத்தப்பட்டது. 9 பேர் திருமுழுக்குப் பெற்று பரலோகத்தை மகிழப்பண்ணினார்கள் துதியுங்கள்! பால்சந்த்உராவ் மனைவி மற்றும் லால்சந்திரசாகேட் ஆகியோருக்கு மனநிலை பாதிப்பிலிருந்து சுகமாகவும், ஊழியரின் பிள்ளைகள் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

17 ரீவா

சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகித்து 120 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, புதிய நபர்கள் சந்திக்கப்பட்டமைக்காக துதியுங்கள்! எதிர்ப்புகளுக்கு மத்தியில் சிறுவர்களுக்கு சத்தியம் போதிக்கப்படுகிறது. இப்பகுதியில் சொந்த ஆலயத்தில் தேவனை ஆராதிக்க ஆலயம் கட்டப்படவும், இப்பணித்தள ஊழியரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

18 குய்யாகலா

8 இடங்களில் குடும்பக் கூடுகைகள் நடத்தப்பட்டு புதிதாக கலந்துகொண்டவர்களுக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டன. 23 பேருக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தேவன் கொடுத்த புதிய தொடர்புகளுக்காக துதியுங்கள்! விசுவாசத்துடன் சபைக்கு வரும் மக்கள் தடையின்றி திருமுழுக்குப் பெற்றுக்கொள்ளவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் படிப்பிற்காகவும், உடன் பிறந்தவர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

19 ஜெயந்த்

கோகாயி மற்றும் ஜயந்த் பகுதியில் இயேசுவின் திரைக்காவியம் காண்பிக்கப்பட்டு, 60 சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சிரேந்தர் குமாரிக்கு ஜெபத்தின் உதவியால் பிசாசின் தொல்லையிலிருந்து விடுதலை கிடைத்தது. துதியுங்கள்! பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு, ஒரு பக்கமாக கை கால் செயலிழந்து நடக்க முடியாத நிலையிலிருக்கும் சவிதாவின் அற்புத சுகத்திற்காகவும், இப்பணித்தள ஊழியருடைய 2 பிள்ளைகளின் உயர்கல்வி படிப்பிற்காகவும், ஊழியரின் ஊழியத் திட்டங்கள் நிறைவேறவும் ஜெபியுங்கள்.,

20 **தராவியா**

தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக 30 சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு 30 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விசுவாசிகளின் குடும்பங்கள் சந்திக்கப்பட்டனர். இப்பணித்தள ஊழியரின் மகள் குளோரிக்கு மஞ்சள் காமாலை நோயிலிருந்தும், மனதளவில் பாதிக்கப்பட்டிருந்த அமலா ரைதாஸ்க்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக துதியுங்கள்! வாலிபர்கள் மற்றும் புதிய நபர்கள் சபை ஆராதனைக்கு வருகைதரவும், இப்பணித்தள ஊழியரின் தொடர் ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

21 **சித்தீ**

கட்டாகாவ், பகாடி, பலாஹ்குர்த் போன்ற புதிய கிராமங்களில் முதன் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மனநிலை பாதிக்கப்பட்டு வீட்டை விட்டு 3 வாரங்களாக காணாமல் போன பைஜ்நாத் ஜெபத்தினால் புத்தி தெளிந்து வீட்டிற்கு திரும்பி வந்தபடியால் துதியுங்கள்! புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க வாசல் திறக்கப்படவும், இப்பணித்தள ஊழியரின் சரீரசுகம், கர்ப்பமாகயிருக்கும் அவருடைய மருமகளின் சுகப்பிரசவத்திற்காகவும் ஜெபியுங்கள்.

22 **அன்பரா**

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட அன்பரா, சட்காபஸ்தி, கரைலா சாலை, சகரியா, சுர்க்கி, சீதார், ககரி, கர்பந்தா, வாஷிகாவ் ஆகிய பகுதிகளில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. திருமுழுக்குப்பெற ஆயத்தமாகயிருக்கும் 9 புதிய விசுவாசிகளுக்காக துதியுங்கள். விசுவாசிகளானதினிமித்தம் தங்கள் உறவினர்களால் இழிவான சொல்லுக்கு ஆளான விசுவாசிகளுக்காகவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

23 **பத்காடி**

பத்காடி பகுதியில் நடத்தப்படுகிற வீட்டு சபை கூடுகையில் 30 பேர் கலந்துகொள்கிறார்கள். ராம் ஸ்ரூப்க்கு ஜெபத்தின் உதவியால் வயிற்று வலியிலிருந்து சுகம் கிடைத்தது. ஜோகைல் என்ற புதிய கிராமத்தில் ஊழியம்

செய்வதற்கு தடையின்றி திறந்த வாசல் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியரின் சகோதரர் நரேஷ்குமாரின் மனந்திரும்புதலுக்காகவும், அவருடைய மனதில் இருக்கும் தவறான சிந்தனைகளை தேவன் மாற்றிப் போடவும், விசுவாசிகளின் குடும்பங்களில் காணப்படும் ஏழ்மைநிலை மாறவும் ஜெபியுங்கள்.

24 **கோட்னி**

புதிய ஏற்பாடுகள் கொடுத்து 17 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தீபிகாவுக்கு தலைவலியிலிருந்தும், லௌகுஷ்க்கு டெங்கு காய்ச்சலிலிருந்தும் ஜெபத்தினால் சுகம் கிடைத்தது துதியுங்கள்! சீமாவுக்கு கர்ப்பப்பை பாதிப்பிலிருந்தும், அடிக்கடி வியாதிப்படுகிற சுனிலால்க்கு சரீர வலியிலிருந்து சுகம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகள் படிப்பு மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், அவருடைய உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

25 **பதாதூ**

பிஷூர் மற்றும் தோர்பா பகுதியில் வீட்டுக் கூட்டங்கள் நடைபெற்றது. உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த சுனிதாவுக்கு ஜெபத்தினால் தேவன் சுகத்தைக் கொடுத்தார். பதாடூ பகுதியில் காணப்படும் எதிர்ப்புகள் நீங்கவும் ஊழியத்திற்கு விரோதமாய் எழும்பும் மக்களை தேவன் சந்திக்கவும், சபை ஆராதனையில் கலந்துகொள்கிற விசுவாசிகள் அனைவரும் தடையின்றி திருமுழுக்குப் பெறவும், இப்பணித்தள ஊழியரின் வயதான பெற்றோருக்கு தேவன் உடல் ஆரோக்கியத்தைக் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

வனாஞ்சல் கோட்டம்

26 **லோயிங்கா**

சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதியஏற்பாடு வாயிலாக 235 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சரீர சுகவீனப்பட்டிருந்த சுனில்குமார், சுபனி, ஷார்னிலா, பிரியா, பார்வதி, பைரோ சவான்ஸி ஆகியோருக்கு விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகம் கிடைத்தது. துதியுங்கள்! மதமாற்றத்தினால் ஜார்க்கண்ட்

மாநிலத்தில் ஊழியத்திற்கு விரோதமாகக் காணப்படும் தடைகள் மாறவும், காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ள மத்தியாபரலா, காது வலியினால் சங்கடப்படும் சலோனி ஆகியோரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

27 **தோர்ப்பா**

பிர்தா, ஜோகி சோசே, பட்டாயிக்டோலி, என்.எச்.பி.சி ஆகிய இடங்களில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்பட்டது. இடைவிடாது இடுப்பு வலியினால் சங்கடப்பட்ட சஞ்ஜித் கேர்கேட்டா, ஜுரத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பூல்மகிகுமாரி ஆகியோருக்கு ஜெபத்தால் பூரண சுகம் கிடைத்தது. புதிதாக சபைக்கு வருகிற விசுவாசிகள் விசுவாசத்தில் இடறிப்போகாமலிக்கவும், ஜெஷ்வந்த் மனநிலை பாதிப்பிலிருந்து சுகமாகவும் மற்றும் இப்பணித்தள ஊழியரின் பெற்றோரின் சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

28 **நர்வா**

சந்தோஷ் கூகுல்சௌவுக், ஜெஸ்கண்டி, தும்முடாங், முண்டமங்கிபவன், தும்காகோடா டோலா ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டது. படாகோடா பகுதியில் பிரச்சார மையம் புதிதாக தொடங்கப்பட்டது துதியுங்கள்! ஜித்தேந்தர், சோமனாத், சசாயா, அனித்தா, அமித், ராஜேஷ், ரவிதாஸ், சமந்த்பால், போஸ் ஆகியோரின் இரட்சிப்பிற்காகவும், புதிய இடங்களில் ஜெபக் கூடுகை ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.

29 **போச்ரா**

100 சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டு 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விசுவாசிகள் குடும்பங்கள் சந்திக்கப்பட்டு விசுவாசத்தில் பெலப்படுத்தப்பட்டார்கள். வீட்டு ஜெபக் கூட்டங்கள் வாயிலாக அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டதற்காகக் துதியுங்கள். சபை விசுவாசிகளுடைய வாலிப பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைத்து விரைவில் திருமணம் நடைபெறவும், இப்பணித்தள ஊழியருக்கு மோட்டார் சைக்கிள் விபத்தில் தோள்பட்டை பகுதியில் ஏற்பட்ட காயம் சுகமாகவும், செயலிழந்து காணப்படும் அவரது சிறுநீரகம் அற்புத சுகமாகவும் ஜெபியுங்கள்.



GEMS Media வெளியீடுகள்





GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : 9344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : 9942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: 9486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : 9443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890, 9944755640
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : 9788689771, 9486357950
Nazareth	No. 3, Dasan street, Nazareth - 628617, Ph. : 9442094110
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629001 Cell : 9894965520
Salem	1/40, Mugil Nagar 4th Cross, Indian Bank Colony, Narasothipatty, Salem - 636004 Cell: 9442337027
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : 9843088840
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : 9442210629
Tuticorin	39, Innaciyarpuram, 2 nd Street, Tuticorin - 628002 Cell : 9442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : 9952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : 9444763141
Coimbatore	No. 7, Laxmi puram, 1st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar - 620020 Cell : 9443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: 9443113322

General Action Center - TamilNadu

GEMS, No. 14/1, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden,
Tirunelveli - 627005 Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: 9448517025
Mumbai	Gala B-47, 2nd Floor, Sharad Industrial Estate, Lake Road, Near Bhandup Police Station, Mumbai - 400 078 Cell : 9322730294, 02225949999
Pondicherry	No. 22, 2nd Floor, 2nd cross, Perumal Raja Garden, Reddiyar Palayam, (opp. SBI Bank), Pondicherry - 605010 Cell : 8521577762
Kerala	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : 9486357950

GEMS National Action Center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

GEMS

சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப்படவேண்டும். மாற்கு 13:10

ஆம்பூரில்

கிறிஸ்தவ நற்செய்தி பெருவிழா

பிப்ரவரி

2020 **7 8 9**

வெள்ளி சனி ஞாயிறு

தினமும் மாலை **6.00** மணி

தேவ செய்தி :

சகோ. D.அகஸ்டின் ஜெபக்குமார்

General Secretary, GEMS, Bihar

துதி ஆராதனை :

சகோ. வெஸ்லீ மேக்ஸ்வெல்

இடம் :

கன்கார்டியா மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம். ஆம்பூர்

GEMS : 7639372360 / 8072227048 / 9443237101 / 9444861595

Contact & Convenor சகோ ஜான் சுஹேல் 9944408998 / 8124226615

நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம். யோசுவா 24:15

தென்னிந்தியத் திருச்சபை, வேலூர் பேராயம் - நங்கமங்கலம் குருசேகரம்

சீயோன் திருமலையில்

குடும்ப ஆசீர்வாத பெருவிழா

இடம்
சீயோன் திருமலை

பிப்ரவரி 8 சனிக்கிழமை
காலை 9 மணி முதல் பகல் 2 மணி வரை

தலைமை & வாழ்த்துரை
The Rt. Rev. H. ஷர்மா நித்தியானந்தம்
Bishop in Vellore

தேவசெய்தி
சகோ D. அகஸ்டின் ஜெபக்குமார்
CEO, General Secretary, GEMS, Bihar

துதி ஆராதனை **Bro. துரை ஜாஸ்பர்** PRO, CMC

சபை பாகுபாடின்றி குடும்பமாய் பங்குபெற
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புக்கு

Rev. M. ஐசக் பெர்னாண்டஸ்	98947 75721
Mr. கருணா ஜான்	99439 12517
Mr. A. தனராஜ்	94436 23477
Mr. S. ஜோன்ஸ் கிருபாகரன்	94429 73480
Mr. D. ராஜேஷ் கண்ணா	97873 38515

Regd. office :

GEMS Educational Media Services

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

if undelivered please return to

GEMS Action Center

14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

Private circulation

தனிப்பிரதி ரூ10-
ஆண்டு சந்தா ரூ100-

To
....
....
....
....